

‘ ஜெயித்து வாழ்ந்திட’ வாலிபர் செய்திகள்!

“வாலவயதின் குமாரர் பலவான் கையிலுள்ள
அம்புகளுக்கு ஒப்பாயிருக்கிறார்கள்”
(சங்கீதம். 127:6)

(சிருஷ்டிகரிடம் சரணடைந்து வாழ்ந்திட அழைக்கும் செய்திகள்)

| 10.04.2020 | **‘பழத்தின் கொட்டை’ அல்ல! உன் முழுவதும் கர்த்தருக்குத் தேவை!** |
|---|---|

திபேத் நாட்டின், *ஜாம்காம்* என்ற மலைச்சாரலில், ஒரு பெரிய மாமரம் துளிர்த்து நின்றது! அது ஒரு காட்டு மாமரம். வாழ்வில் முதன் முதலாவதாக நான் காட்டு மாமரத்தைக் கண்டது அன்றுதான். “அந்த மரங்களினால் மனிதருக்கு அதிக பிரயோஜனம் கிடையாது. கனி சதைப்பற்றைவிட மாங்கொட்டைதான் பெரிதாக இருக்கும்” என்று அங்குள்ள ஒரு மனிதர் என்னிடம் கூறினார். “இஸ்ரவேல் பலனற்ற திராட்ச செடி. அது தனக்குத்தானே கனி கொடுக்கிறது....” (ஓசியா.10:1) என்ற தேவ வசனம்தான் அப்பொழுது என் நினைவுக்கு ஓடோடி வந்தது.

தன் ஜீவ காலமெல்லாம், தன் சிருஷ்டிகருக்கென்று வாழாமல், தனக்காகவே பாவ வாழ்க்கை வாழும் எந்த ஒரு வாலிபனும், இந்த மாம்பழத்தைப்போலவே இருக்கிறான். அவன், தன் வாலிப பருவத்தை வீணாக்கிவிட்டு, தன் விருத்தாப்பிய தளர்ந்த காலத்தில், கர்த்தரைத் தேட முயற்சிப்பது “பழத்தை அல்ல” வெறும் கொட்டையை அவருக்குத் தருவதுபோல் அல்லவா? தன் இளமை வாலிப நாட்களிலேயே தன் சிருஷ்டிகரைத் தேடி வரும் எந்த வாலிபனும் பாக்கியவான்! நிறைவான ஜீவியத்தை அவன் கர்த்தருக்கு கொடுத்து பேரானந்தம் அடைவான்! நித்திய ஜீவனும் பெறுவான்!

‘விலக்கப்பட்ட கனியின்’ சுவையில் சிற்றின்பத்தை அள்ளிப்பருகும் வாலிபனே, உன் இளமை வீணாகுவதை காண்பாயாக! சிருஷ்டிகர் தரும் ‘ஜீவ கனியன்றோ’ உன் வாழ்வின் சிறப்பு! அதை அறிந்து, அவருக்கே உன் வாழ்வைத் தந்து பேரின்பம் காண்பாயாக!

**- வாலிபம் இயேசுவுக்கே**